## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 34/2020

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சங்கர் | மதம் | : இந்து |
| த/பெ | : சுப்பிரமணி | ஜாதி | : -- |
| வயது | : 49 | கிராமம் | : அரும்பாக்கம் |
| தொழில் | : கூலி | வட்டம் | : திருத்தணி |

30.09.2024

**வா.சா.2 திரும்ப அழைக்கப்பட்டு 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு இந்த வழக்கில் சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வெங்கடேசன் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பது தெரியுமா என்றால் நரேஷ் வெங்கடேசன் இடத்தில் தகராறு செய்ததால் வெங்கடேசன் வழக்கு தாக்கல் செய்தார். வழக்கு சொத்து நிலம் அரசு நிலமா அல்லது வெங்கடேசம் நிலமா என்றால் அனாதீனம் ஆகும். அரசாங்க இடத்தில் வீடு கட்டக்கூடாது என்ற விவரம் தெரியுமா என்றால் அங்கு இருப்பவர்கள் இதுபோல் நிறைய பேர் வீடு கட்டியுள்ளனர்.

2. அரசாங்க இடத்தில் வீடு கட்டக்கூடாது என்றாலும் நான் பொய்யாக வெங்கடேசனுக்கு ஆதரவாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தவறாக அரசாங்கத்தை தவறாக சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. நான் கூறும் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)